## இலங்கைக்கு உதவிப் பொருள்கள்: முதல்வருக்கு மகிந்த ராஜபட்ச நன்றி

**சென்னை / கொழும்பு, மே 6:** பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு தமிழகத்தின் சார்பில் நிவாரணப் பொருள்கள் அனுப்பப்படுவதற்காக முதல்வர் ஸ்டாலினுக்கு அந்த நாட்டு பிரதமர் மகிந்த ராஜபட்ச நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஸ்டாலினுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: இலங்கையில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதார சூழலில், கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ள மக்களுக்கு தமிழகத்திலிருந்து உணவு, அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் அனுப்பி வைக்கப்படும் என்று தாங்கள் அறிவித்துள்ளது தங்களது நல்லெண்ணத்தைக் குறிக்கிறது. இலங்கை பொருளாதார நெருக்கடியை வெறும் அண்டை நாட்டு பிரச்னையாகப் பார்க்காமல் மனிதாபிமான அடிப்படையில் நோக்கும் தங்களுக்கும் தமிழக அரசுக்கும் இலங்கை மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசின் வருவாயைப் பெருக்க தொழில்நுட்ப உதவிகள்

**சென்னை, மே 6:** அரசின் வருவாயைப் பெருக்குவதற்கான வழிமுறைகள், தொழில்நுட்ப உதவிகளுக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தமானது முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் வெள்ளிக்கிழமை பரிமாறப்பட்டது.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்தி:-

இந்திய மாநிலங்களில் பயன்மிகு ஆளுமைக்கான மையமானது, லாப நோக்கமற்ற அமைப்பாகும். இது மாநிலங்களின் செயல்பாட்டினைமேம்படுத்தும் நோக்குடன் செயல்படுகிறது. இந்த மையம் ஏற்கெனவே சில மாநில அரசுகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக, மாநில வருவாயைப் பெருக்குதல், அரசு கொள்முதலின் செயல் திறன் மற்றும் பணத்துக்கான மதிப்பினை மேம்படுத்துதல், மனிதவள மேலாண்மை அமைப்பு, ஒருங்கிணைந்த நிதி மேலாண்மை அமைப்பினை ஒருங்கிணைப்பதற்கான பகுப்பாய்வு செய்தல் போன்ற பணிகளில் தமிழ்நாடு அரசுக்கு உதவி புரியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின் போது, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் என்.முருகானந்தம், நிதித் துறை கூடுதல் செயலாளர் பிரசாந்த் மு.வடநெரே உள்ளிட்ட பலரும் உடனிருந்தனர்.

**தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம்**



தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய மாநிலங்களின் பயன்மிகு ஆளுமைக்கான மையத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாற்ற நிகழ்வில் நிதித்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, நிதித்துறை செயலாளர் என்.முருகானந்தம், இந்திய மாநிலங்களின் பயன்மிகு ஆளுமைக்கான மையத்தின் இணை நிறுவனர் ஆஷிஷ் தவான், தலைவர் விஜய் பிங்ளே உள்ளிட்டோர்.

## அமைச்சருக்கு எதிரான அமலாக்கத் துறை விசாரணைக்கு இடைக்காலத் தடை

**சென்னை, மே 6:** அமைச்சர் செந்தில்பாலாஜி உள்ளிட்டோருக்கு எதிராக அமலாக்கத்துறை பதிவு செய்த வழக்கு விசாரணைக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது.

அதிமுக ஆட்சி காலத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பதவி வகித்தபோது, தனது துறையில் வேலை வாங்கித் தருவதாக பணம் பெற்று மோசடி செய்ததாக தற்போதைய மின்சாரத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜிக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. இதில் சட்டவிரோத பணப் பரிமாற்றம் நடைபெற்றதாகக் கூறப்படுவது குறித்து அமைச்சர் உள்ளிட்டோருக்கு எதிரான ஒரு தனி வழக்கை அமலாக்கத்துறை பதிவு செய்தது.

இதில் ஆஜராகும்படி அனுப்பிய சம்மனுக்கு எதிராக குற்றம்சாட்டப்பட்ட சண்முகம் தொடர்ந்த மனு மீது, சென்னை உயர்நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தது.

மேலும், இந்த மனுவுக்கு அமலாக்கத்துறை 4 வாரங்களில் பதிலளிக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் ஆர்.மகாதேவன், எஸ்.ஆனந்தி ஆகியோர் உத்தரவிட்டனர்.

## அங்கி அணிய வழக்குரைஞர்களுக்கு விலக்கு

**சென்னை, மே 6:** கோடை விடுமுறை முடியும் வரை வழக்கு விசாரணையின்போது வழக்குரைஞர்கள் கருப்பு அங்கி அணியத் தேவையில்லை என சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி முனீஸ்வர்நாத் பண்டாரி தெரிவித்தார்.

வழக்குரைஞர்கள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று, கோடை விடுமுறை முடியும் வரை வழக்குரைஞர்களுக்கு கருப்பு அங்கி அணிவதில் இருந்து விலக்களித்த தலைமை நீதிபதி, கட்டாயம் கருப்பு கோட் மற்றும் கழுத்துப் பட்டை அணிய வேண்டும் எனக் கூறியுள்ளார்.

## அண்ணா பல்கலை.: சான்றிதழ் கட்டணம் உயர்வு

**சென்னை, மே 6:** அண்ணா பல்கலைக்கழகத்தின் ஒருங்கிணைந்த மதிப்பெண் பட்டியல் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ்களுக்கான கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதில், ஒருங்கிணைந்த மதிப்பெண் விவரங்கள் அடங்கிய, 'டிரான்ஸ்கிரிப்ட்' சான்றிதழ் பெற, கட்டணம் இரு மடங்காகி உள்ளது. புதிய கட்டணமாக 1,500 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 'கிரேடு' விவரங்கள் அடங்கிய அசல் சான்றிதழின் இரண்டாம் பிரதி பெற ரூ.3,000; ஒருங்கிணைந்த கிரேடு மதிப்பெண் சான்றிதழின் இரண்டாம் பிரதிக்கு ரூ.5,000; பட்ட சான்றிதழின் அசல் பிரதி பெற ரூ.10 ஆயிரம்; தற்காலிக பட்ட சான்றிதழில் திருத்தம் செய்ய ரூ.500 கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பட்ட சான்றிதழில் மாதம் மற்றும் ஆண்டு குறிப்பிட ரூ.300; உண்மைத் தன்மை சான்றிதழுக்கு இந்திய நிறுவனங்கள் என்றால், ரூ.2,000, வெளிநாடுகள் என்றால் 100 அமெரிக்க டாலர்; அதாவது, இந்திய மதிப்பில் ரூ.7,500 என கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### பொது அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது என்னவென்றால், என் கட்சிக்காரர்களில் ஒருவர், பின்வரும் அதாவது கதவு எண் 30, (மிகப் பழைய எண் 8, பழைய எண் 17), லட்சுமி அம்மன் கோயில் தெரு, சிறுவள்ளூர், பெரம்பூர், சென்னை-600011 பழைய சர்வே எண். 40/1 பகுதி; தற்போதைய T.S.எண். 35, செம்பியம் டிவிஷன் எனும் சொத்தினை திரு. J. சீனிவாசன் அவர்களிடமிருந்து வாங்குவதற்கு உத்தேசித்துள்ளார். அந்தச் சொத்தை அவர் அசல் உரிமையாளரான மறைந்த T.A.கோவிந்தராஜ முதலியார் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுகளிடமிருந்து அதாவது அப்போது உயிருடனிருந்த ஒரேயொரு சட்ட வாரிசு அவரது ஒரே மூத்த சகோதரர் மறைந்த T.A.சண்முக முதலியார் அவர்களிடமிருந்து வாங்கியுள்ளார். மேற்படி சொத்தின் மீது ஏதேனும் எந்தவொரு நபருக்கேனும் உரிமைக்கோரல் அல்லது கடன் தீர்க்கவேண்டியது எதுவும் இருந்தால் அதை இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் எழுத்துப்பூர்வ ஆதாரத்துடன் கீழே கையொப்ப மிட்டுள்ளவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். தவறினால், எனது வாடிக்கையாளர் இது தொடர்பாக மேலும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

**R. ரவீந்திரன்**
வழக்கறிஞர்,
அறை எண்.106, முதல் தளம்
9/5, சுங்குராம தெரு, சென்னை-600001

06.05.2022


**CHRISTIAN MEDICAL COLLEGE**
VELLORE, TN - 632 002 Email: registrar@cmcvellore.ac.in

**ADMISSIONS NOTICE 2022**

**Group A :** MBBS, B.Sc., Nursing - Vellore campus, B.Sc., Nursing - Chittoor campus and Allied Health Sciences (AHS) Degree Courses

**Group B :** Diploma in Nursing, AHS Diploma Courses, AHS PG Diploma courses. MSc Bioethics, Biostatistics, Medical Physics, Epidemiology, Clinical Nutrition & Nuclear Medicine Technology. MPH (Master of Public Health), MHA (Master of Hospital Administration), MPT (Master of Physiotherapy), Fellowships in Antimicrobial Stewardship for Clinical Pharmacists, Hospital Quality Management (FHQM) & Hospital Chaplaincy.

**Medical Post-Graduate Courses**

**Certificate courses & Post-Doctoral Fellowship Courses**

**M.S. Bioengineering Course**

The last date for online application submission with payment is 3rd June 2022.

For more details refer respective Admission Bulletins available at CMC,Vellore website http://admissions.cmcvellore.ac.in

PLEASE NOTE: WE DO NOT ADMIT STUDENTS THROUGH AGENTS OR AGENCIES

Important Information: "The admission process contained in the Bulletins shall be subject to any order that maybe passed by the Hon'ble Supreme Court or the High Court in the proceedings relating to the challenge to the NEET or any other statutory enactments that maybe passed by the Central or State Government." REGISTRAR

**COLLEGE OF NURSING**
VELLORE, TN - 632 004 Email: registrarcon@cmcvellore.ac.in

**M.Sc., Post Basic B.Sc., Post Basic Diploma and Fellowship in Nursing Programmes Admissions: 2022 - 2023**

**Application form can be accessed & submitted only online through the College website till 31-05-2022**

Please refer to Admission Bulletin (available at our website) for Course details, eligibility criteria etc. REGISTRAR


## refex ரி்ஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 11வது தளம், பாஸ்கான் பியூச்சரா ஐடி பார்க், புதிய எண்.10/2, பழைய எண்.56L, வெங்கட்நாராயணா சாலை, தி.நகர், சென்னை 600 017
Tel.: +91-44-43405950 | E-Mail: admin@refex.co.in | Website: www.refex.co.in | CIN: L45200TN 2002PLC049601

**31 மார்ச் 2022ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட தனியான நிதிநிலை முடிவுகள் சுருக்கம்**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | விவரங்கள் | தனியானது | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | முடிந்த காலாண்டு | | | முடிந்த ஆண்டு | |
| | | மார்ச் 31, 2022 | டிசம்பர் 31, 2021 | மார்ச் 31, 2021 | மார்ச் 31, 2022 | மார்ச் 31, 2021 |
| | | தணிக்கை யானது | தணிக்கை யாகாதது | தணிக்கை யானது | தணிக்கை யானது | தணிக்கை யானது |
| 1 | செயல்பாடுகள் மூலம் மொத்த வருவாய் | 17,691.97 | 8,971.87 | 15,247.11 | 44,395.88 | 63,265.88 |
| 2 | விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்கள் மற்றும் வரிகளுக்கு முன் லாபம்/(நஷ்டம்) | 1,868.67 | 945.99 | 1,294.83 | 4,760.33 | 5,785.79 |
| 3 | வரிகளுக்கு முன் லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 3,206.28 | 945.99 | 1,294.83 | 6,097.94 | 5,785.79 |
| 4 | வரிகளுக்கு பின் லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும் அசாதாரண அயிட்டங்களுக்கு பின்) | 2,401.02 | 684.14 | 759.85 | 4,538.99 | 4,094.34 |
| 5 | காலத்திற்கான மொத்த பரிபூரண (நஷ்டம்)/லாபம் | 2,406.25 | 684.14 | 759.96 | 4,544.22 | 4,094.45 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (ஒவ்வொன்றும் முகமதிப்பு ரூ.10/-) | 2,100.20 | 2,100.20 | 2,100.20 | 2,100.20 | 2,100.20 |
| 7 | கையிருப்பு (மறுமதிப்பீட்டு இருப்பு தவிர) | - | - | - | 16,296.03 | 11,856.81 |
| 8 | ஒரு பங்கு சம்பாத்தியத்திற்கான லாபம்/(நஷ்டம்) | | | | | |
| | (1) அடிப்படை : (ரூபாயில்) | 11.43 | 3.26 | 3.62 | 21.61 | 21.74 |
| | (2) டைலூட்ட் : (ரூபாயில்) | 11.43 | 3.26 | 3.62 | 21.61 | 21.74 |

**குறிப்பு :**

1. SEBI (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33-ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. நிதிநிலை முடிவுகளின் முழுமையான வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் (www.bseindia.com) (www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.refex.co.in)-ல் உள்ளது.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133ன் கீழ் இந்திய கணக்கியல் தரநிலைகளின்படி (INDAS) கம்பெனியின் நிதிநிலை முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.
3. ஒரே துணை நிறுவனமான அதாவது விதுசா சோலார் எனர்ஜி லிமிடெட்டில் வேலைநிறுத்தம் செய்யப்படுவதால், துணை நிறுவனத்தில் செய்யப்பட்ட முதலீடு தள்ளுபடி செய்யப்பட்டு, லாபம் மற்றும் நஷ்ட கணக்கில் அது ஒரு விலக்கு செலவு அயிட்டமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மார்ச் 31, 2022 நிலவரப்படி வேறு எந்த துணை நிறுவனமும் இல்லாததால், நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கைகளின் அதே ஒருங்கிணைப்பைக் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை.
4. மேற்கண்ட தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகள் தணிக்கை குழுவால் பரிசீலனை செய்யப்பட்டு 06 மே, 2022 அன்று நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது.
5. ஒப்பீட்டு நோக்கிற்காக எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் புள்ளி விவரங்கள் தேவையான இடங்களில் மறுவகைப் படுத்தப்பட்டு/தொகுக்கப்பட்டுள்ளன.

குழு உத்தரவுப்படி
**ரி்ஃபெக்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டிற்காக**
ஒப்பம்/- **அனில் ஜெயின்**
இயக்குனர்
DIN:00181960

இடம் : சென்னை
தேதி : 06 மே, 2022


**BRANCH SHIFTING**

மதிப்பு மிக்க எமது வாடிக்கையாளர்களின் சிறப்பான வசதிக்காக, எங்களது

**MADIPAKKAM**

கிளையானது 08.08.2022 முதல் கீழே தரப்பட்டுள்ள புதிய முகவரியிலுள்ள கட்டிடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

**Muthoot Finance Ltd**
No. 51/1, Ground Floor,
Madipakkam Main Road,
Madipakkam, Chengalpet District,
Chennai - 600 091,
Tamilnadu.
Phone No : 044 222 42621
Email id - mgmad593@muthootgroup.com

உங்களது ஆதரவையும் உதவியினையும் நாங்கள் தொடர்ந்து வரவேற்கிறோம்.

Muthoot Finance
A Muthoot M George Enterprise


### பொது அறிவிப்பு

சென்னை-600 004, மயிலாப்பூர், ராமகிருஷ்ணா மடம் ரோடு, பழைய எண்.157, கதவு எண்.245, விஷ்வகமல் அபார்ட்மெண்ட்ஸ், 4வது தளம், ஃபிளாட் எண்.33- எனும் முகவரியில் வசித்து வரும் **N.விஜயன்**, த/பெ. திரு.கோவிந்தன், வருமான வரி PAN எண்.AAAPN7996C மற்றும் ஆதார் அட்டை எண்.9320 0909 4855, சுமார் 66 வயதுடைய நான், இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் மயிலாப்பூர் சார்-பதிவாளர் அலுவலகத்தில் 25.06.1993- அன்று பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல ஆவண எண்.1250 of 1993 தொலைந்து விட்டது. யாரேனும் அதனைக் கண்டுபிடித்தால், எனது கைப்பேசி எண். 9940213311-ற்கு அல்லது மேலே குறிப்பிடப்பட்ட எனது வீட்டு முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**N.விஜயன்,**
சென்னை-600004
செல்:9940213311

## இண்டஸ்இண்ட் பேங்க்

எண்.25, ஸ்டீபிள் ரீச், A பிளாக், 3 வது தளம், கதீட்ரல் சாலை, கோபாலபுரம், சென்னை – 600086

**மின்னணு ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு**

பிணைக்காப்பு மற்றும் நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு செயலாக்க சட்டம் 2002 - உடன் படிக்க - 'பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 (மேற்சொன்ன விதிகள்) ன் விதி 8(6) ன் கீழ் அசையாச்சொத்துக்கள் விற்பனை

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர் மற்றும் கூட்டு-கடன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், சர்ஃபாசி சட்டத்தின் கீழ், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் சொத்து, ஜாமீன் பெற்று கடனளித்த M/s. இண்டஸ்இண்ட் பேங்க் லிமிட்டெட் - க்கு அடமானம் செய்யப்பட்டுள்ளது / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னிட்டு, இதன் கீழ் குறிப்பிட்ட கடன்தாரர் நிலுவைகளை செலுத்த தவறியமையாலும், அக்கணக்கு செயல்படாத சொத்தாக (NPA) பகுக்கப்பட்டதாலும், வங்கியானது சர்ஃபாசி சட்டம் 2002 ன் பிரிவு 13(2) ன் கீழ் 19.07.2021 அன்று அறிவிப்பு வழங்கி, கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர்களை அழைத்து, அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள தொகையை திருப்பி செலுத்த கோரினார். மேலும் கடன்தாரர் தொகையை திருப்பி செலுத்த தவறியமையாலும், கீழ்க்கையொப்பமிட்ட நபர் இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்துக்களை மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(4) - உடன் படிக்க - பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 ன் கீழ் 03.11.2021 அன்று சுவாதீனம் எடுத்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட விபரம் தொடர்பாக, கடன்தாரர் M/s. சக்தி ஃபுட்வேர் மற்றும் ஜாமீன்தாரர்கள் திரு. செந்தில் முருகன் தினமணி, திரு. லட்சுமிநாராயணன், திருமதி. உஷா லட்சுமிநாராயணன் மற்றும் திரு. K. ஜெய்த் அஹமத் ஆகியோரிடமிருந்து 30.06.2021 ம் தேதியின் படியிலான நிலுவைத்தொகை ரூ. 5,17,40,071.82/- (ரூபாய். ஐந்து கோடியே பதினேழு இலட்சத்து நாற்பதாயிரத்து எழுபத்து ஒன்று மற்றும் பைசா எண்பத்து இரண்டு மட்டும்) மற்றும் ஒப்பந்தவீதத்தில் மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றை வசூலிப்பதற்காக, இதன் கீழ் குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்கள் ''இருக்கின்ற இடத்தில்'' ''இருக்கின்ற நிலையில்'' மற்றும் ''இருக்கின்றவற்றுடன்'' என்ற அடிப்படையில் 25.05.2022 அன்று விற்பனை செய்யப்படும். சொத்துக்கான அடிப்படை விலை ரூ.4,81,05,000/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) டேவணித்தொகை - ரூ.48,10,500/- (ரூபாய் நாற்பத்து எட்டு இலட்சத்து பத்தாயிரத்து ஐனூறு மட்டும்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**அசையா சொத்து விபரம்**

கடன்தாரர் பெயர் - M/s. சக்தி ஃபுட்வேர்

அசையா சொத்து விபரம் - திரு. V லட்சுமி நாராயணன், த/பெ. N. வேங்கடவரதன், பெயரில் உள்ள சொத்து. ஆவண எண். 5091/1992 – தேதி - 25.09.1992, சேலையூர் சார்பதிவகம்., முன்பு தாம்பரம் சார்பதிவகம்.

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தாலுக்கா, முன்பு செங்கை MGR மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை தாலுக்கா, பெரும்பாக்கம் கிராமம், செயின்ட் தாமஸ் மவுண்ட் பஞ்சாயத்து ஒன்றியம், சர்வே எண். 429/2J ல் அமையப்பெற்ற ''சௌம்யா நகர் எக்ஸ்டன்சன் IV'' (07.08.1992 தேதிய கடித எண். L1/16967/1992 ன் படி MMDA ஆல் அங்கீகரிக்கப்பட்ட லே அவுட் அங்கீகார எண். PPD/LO எண். 96/72) ல் உள்ள 5985 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண்கள். 11 & 12 மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன : 24 அடி சாலைக்கு - வடக்கு, காலி இடத்துக்கு - தெற்கு, ப்ளாட் எண். 13 க்கு - கிழக்கு, 30 அடி சாலைக்கு - மேற்கு அளவீடுகளாவன : வடக்கு - 51 அடி., தெற்கு - 60 அடி, கிழக்கு - 101 அடி., மேற்கு - 119 அடி., இது தென் சென்னை பதிவு மாவட்டம், முன்பு தாம்பரம் தற்போது சேலையூர் சார் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.

அசையா சொத்து விபரம் - திருமதி. உஷா லட்சுமி நாராயணன், க/பெ. V லட்சுமி நாராயணன் பெயரில் உள்ள சொத்து. ஆவண எண். 688/1994 தேதி 25.02.1994, சேலையூர் சார்பதிவகம்., முன்பு தாம்பரம் சார்பதிவகம்.

காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தாலுக்கா, முன்பு செங்கை MGR மாவட்டம் மற்றும் சைதாப்பேட்டை தாலுக்கா, பெரும்பாக்கம் கிராமம், செயின்ட் தாமஸ் மவுண்ட் பஞ்சாயத்து ஒன்றியம், சர்வே எண். 429/2J & 429/2K ல் அமையப்பெற்ற (லே அவுட் அங்கீகார எண். PPD/LO எண். 115/1993) லே அவுட்டில் உள்ள 1 கிரவுண்டு 2290 சதுர அடி பரப்பளவு கொண்ட ப்ளாட் எண்கள். 4 & 5 மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன : சர்வே எண். 429/2J(பகுதி)யில் உள்ள இடங்களுக்கு - வடக்கு, 30 அடி சாலைக்கு - தெற்கு, ப்ளாட் எண். 3 க்கு - கிழக்கு, 30 அடி சாலைக்கு - மேற்கு, அளவீடுகளாவன – வடக்கு - 62 அடி., தெற்கு - 85 அடி, கிழக்கு - 60 அடி 6 இன்ச்., மேற்கு - 56 அடி., இது தென் சென்னை பதிவு மாவட்டம், முன்பு தாம்பரம் தற்போது சேலையூர் சார் பதிவு மாவட்ட எல்லைக்குள் அமைந்துள்ளது.

அடிப்படை விலை - ரூ.4,81,05,000/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்)

டேவணித்தொகை (அடிப்படை விலையில் 10%) - ரூ.48,10,500/- (ரூபாய் நாற்பத்து எட்டு இலட்சத்து பத்தாயிரத்து ஐனூறு மட்டும்)

தெரிந்த வில்லங்கம் (ஏதேனும் இருப்பின்) - வங்கியின் அறிவுக்கு எட்டியவரையில் இல்லை.

சொத்து எதிராக வைக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு தெரிந்த இதர நிலுவைகள் மற்றும் மதிப்பு - வங்கியின் அறிவுக்கு எட்டியவரையில் இல்லை.

சொத்து ஆய்வு - 23.05.2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 02.00 மணி வரை

தொடர்பு நபர் பெயர் மற்றும் தொலைபேசி எண். திரு. D வரதராஜ் (அதிகாரப்பூர்வ அலுவலர்) அலைபேசி எண். 99660 78652 / திரு. V.M. திவாகரன், அலைபேசி எண். 99623 33307

விலைப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி தேதி - 24.05.2022 மாலை 04.00 மணி வரை

விலைப்புள்ளி திறப்பு நேரம் மற்றும் இடம் - மின்னணு / விலைகோரல்கள் வலைதளம் (https://www.bankeauctions.com)ல் 25.05.2022 அன்று காலை 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை.

விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், மின்னணு ஏலத்துக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகள் / அந்தந்த சொத்து விற்பனை மற்றும் இதர விபரங்களுக்கு, ஜாமீன் பெற்று கடனளித்தவரின் வலைதளம் https://www.indusind.com யை தயவு கூர்ந்து பார்வையிடவும். ஏலதாரர்கள் https://www.bankeauctions.com யையும் பார்வையிடலாம் அல்லது சேவைதாரர் M/s. C1 India Private Limited., ஏலதாரர்களுக்கான உதவி எண்ள். 0124-4302020 / 21 / 22, +91 7291981124 / 1125 / 1126, மின்னஞ்சல் முகவரி - support@bankeauctions.com, திரு ஹரீஷ் கௌடா, தொடர்பு எண். +91 9594597555 & திரு.பிரபாகரன், தொடர்பு எண். +91 7418281709

இந்த அறிவிப்பு சர்ஃபாசி சட்டம் 2002 மற்றும் அதன் கீழான சர்ஃபாசி விதிகளில் விதி 8 துணை விதி 6 ன் கீழான 15 நாட்கள் அறிவிப்பாகும்.

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்
இண்டஸ்இண்ட் பேங்க் லிட்

தேதி : 06.05.2022
இடம் : சென்னை

## சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006
தொலைபேசி : 044 - 28332115, தொலைநகல் : 044 - 28332113 இணையதளம் : www.sundaram-clayton.com
மின்னஞ்சல் : corpsec@sundaramclayton.com CIN : L35999TN1962PLC004792

**31 மார்ச் 2022 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான நிதிநிலை முடிவுகள்**

(ரூ. கோடிகளில்)

| வ. எண் | விவரங்கள் | தனித்தது | | | ஒருங்கிணைந்தது | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முடிவடைந்த காலாண்டு | | முடிவடைந்த ஆண்டு | முடிவடைந்த காலாண்டு | | முடிவடைந்த ஆண்டு |
| | | 31.03.2022 | 31.03.2021 | 31.03.2022 | 31.03.2022 | 31.03.2021 | 31.03.2022 |
| | | (தணிக்கை செய்யப்படாதது) | | (தணிக்கை செய்யப்பட்டது) | (தணிக்கை செய்யப்படாதது) | | (தணிக்கை செய்யப்பட்டது) |
| 1 | மொத்த வருமானம் | 589.99 | 503.71 | 1,836.86 | 6,915.91 | 6,451.09 | 25,625.15 |
| 2 | விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் | 124.45 | 130.00 | 177.89 | 404.82 | 455.14 | 1,196.15 |
| 3 | விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் | 735.89 | 127.77 | 2,300.49 | 414.64 | 446.71 | 1,184.20 |
| 4 | விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் | 722.24 | 82.85 | 2,276.69 | 308.00 | 307.34 | 824.49 |
| 5 | நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம்] | 720.22 | 129.13 | 2,273.57 | 324.68 | 390.82 | 824.30 |
| 6 | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-) | 10.12 | 10.12 | 10.12 | 10.12 | 10.12 | 10.12 |
| 7 | ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) | - | - | 2,890.24 | - | - | 5,069.12 |
| 8 | பங்கு பிரீமியம் கணக்கு | 36.42 | 36.42 | 36.42 | 36.42 | 36.42 | 36.42 |
| 9 | நிகர மதிப்பு | 2,893.66 | 556.27 | 2,893.66 | 5,015.06 | 2,679.66 | 5,015.06 |
| 10 | நிலுவையில் உள்ள கடன் (NBFC துணை நிறுவனம் தவிர) | 732.64 | 631.23 | 732.64 | 3,065.81 | 2,407.22 | 3,065.81 |
| 11 | நிலுவையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள் | - பொருந்தாது - | | | | | |
| 12 | கடன் சம விகிதாசாரம் (விதிவிலக்கான வகைகள் சேர்த்து) | 0.25 | 0.85 | 0.25 | 2.00 | 2.35 | 2.00 |
| 13 | பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை) | | | | | | |
| | (அ) அடிப்படை (ரூபாயில்) | 356.98 | 40.95 | 1,125.29 | 80.81 | 82.62 | 217.84 |
| | (ஆ) டைல்யூட்டட் (ரூபாயில்) | 356.98 | 40.95 | 1,125.29 | 80.81 | 82.62 | 217.84 |
| 14 | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | - பொருந்தாது - | | | | | |
| 15 | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | - பொருந்தாது - | | | | | |
| 16 | கடன் சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் தவிர) | 2.87 | 1.38 | 1.97 | 6.04 | 9.19 | 5.61 |
| 17 | வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் தவிர) | 14.29 | 16.95 | 7.57 | 15.84 | 11.83 | 12.56 |

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ம் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் விதி 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளங்களிலும் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.sundaram-clayton.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133 மற்றும் அதன் கீழான விதிகள் மற்றும் கம்பெனிகள் (இந்தியன் அக்கவுண்டிங் ஸ்டாண்டர்டு) 2015 விதிகளின்படி மேற்கண்ட தனித்த மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
3. 31.03.2022ல் முடிவடைந்த ஆண்டில் ஒரு பங்கின் வருவாய் (EPS) ரூ.1,125.29 மற்றும் 31.03.2022ல் முடிவடைந்த காலாண்டில் (EPS) ரூ.356.98 என்பது விதிவிலக்கான வருமானம் முறையே ரூ.2,142.35 கோடிகள் மற்றும் ரூ. 617.03 கோடிகள் அடங்கியது. விதிவிலக்கான வருமானத்தைத் தவிர்த்து, 31.03.2022ல் முடிவடைந்த ஆண்டிற்கான EPS ரூ. 66.39 மற்றும் 31.03.2022ல் முடிவடைந்த காலாண்டிற்கான EPS ரூ. 52.00 ஆகும்.

சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட்டிற்காக

R. கோபாலன்
தலைவர்

தேதி : 06.05.2022